# 49. சித்தர் சிவவாக்கியார் பாடல்களில் வாழ்வியல் கூறுகள்



**முனைவர் க. கலாவதி**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்
கோவை - 43.

மனிதனை உயர்ந்தோனாக நெறிப்படுத்தும் பண்புகளே வாழ்வியல் கூறுகளாகும். இக்கூறுகள் தனிமனித வாழ்வினை உயர்த்துவதோடு சமுதாயத்தையும் உயர்த்துகின்றது என்பதே உண்மை. சித்தர் சிவவாக்கியர் பாடல்களில் அத்தகைய கூறுகள் இடம்பெற்றிருக்கும் விதத்தினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது.

## சித்தர்-விளக்கம்

'சித்து' என்ற சொல்லுக்கு 'அறிவு' என்பது பொருள். எனவே சித்தர் என்பவர் அறிவுடையோர் என கொள்ளலாம். மேலும் எட்டு சித்திகளைக் கைக்கூடப் பெற்றவரும் சித்தர் என அழைக்கப்பட்டனர். சித்தர்கள் பதினெட்டு என்றுரைத்து பட்டியலிட்டுள்ளது அபிதான சிந்தாமணி.

சித்தர்கள் என்றால் ஏதோ மருத்துவத்தையும் ஆன்மீகத்தையும் மட்டுமே ஆய்ந்து தெளிந்தும் உலகுக்கு அளித்தவர்கள் என்ற கருத்துதான் பரவலாக இருந்துவருகிறது. அது முற்றிலும் தவறான பதிவு என்றுதான் சொல்ல வேண்டும். மொழி இல்லாமல் எது நிலைக்கும்? தமிழின் முதல் இலக்கண நூலைத் தந்தவரே அகத்தியர்தான் (சித்தர்) மொழியை இழந்த சமூகம் வரலாற்றை இழந்துவிடும் என்பதை அறிந்த சித்தர்கள் மொழியை வளர்த்தனர்.

***என்னை நன்றாக இறைவன் படைத்தனன்***
***தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே***

என்பது சித்தர் திருமூலரின் பெருமிதம் மிகுந்த பிரகடனம் தமிழைப்பாடுவதற்காகவே இறைவன் என்னைப் படைத்திருக்கிறான் என்ற அவருடைய வாக்கும் என்று புளங்காகிதம் அடைந்திருக்கும் திருமூலரின் தமிழிப்பற்றை என்னென்று உரைப்பது. இவ்வாறு சித்தர்கள் தங்கள் பாடல்கள் மூலம் தமிழ் வளர்சிசிக்குத் தொண்டாற்றியுள்ளனர்.

## சிவவாக்கியர்

தாம் பிறக்கும்போதே 'சிவ சிவ' என்று உச்சரித்தபடியே பிறந்தமையால் சிவவாக்கியர் என்றும், தம் பாடல்களில் 50 இடங்களுக்கு மேல் 'சிவாயம்' என்ற மந்திர வாக்கியத்தைப்

பயன்படுத்தியிருப்பதால் சிவவாக்கியர் என்றும் அழைக்கப்பட்டார் என இலக்கியங்கள் வழி அறிகிறோம். இவர் 14 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 15 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் என்று கூறுவர்.

## கடவுள் ஒருவரே

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதை அனைவரும் உணரவேண்டும். இதனைவிடுத்து எங்கள் தெய்வம், உங்கள் தெய்வம் என்று ஏன் வாதிடவேண்டும்.அங்கும் இங்கும் என எங்கும் நிறைந்திருக்கும் இறைவனைக் கூறுபோட்டு வேற்றுமை செய்யும் சமயவேறுபாடு எதற்கு? என வினவுகின்றார் சிவவாக்கியர். (பா: 133,224)

நட்டுவைத்த ஒருகல்லைத் தெய்வமாக நினைத்து வழிபடுவதை விரும்பாதவர் இவர். சமைக்கப்பயன்படும் சட்டியும், அகப்பையும் அந்த உணவின் சுவையை அறியாதது போல நமக்குள் இருக்கும் இறைவனை நாம் இன்னும் ஏன் அறியாமல் இருக்கிறோம் என்றும் கேட்கிறார். (பா: 520)

## மனிதர் இயல்பு

நெற்பயிரோடு களைகளும் முளைப்பது போல் நல்லவர்கள் நடுவில் தந்திரமாக வாழ மெய்யை விட்டுப்பொய் கூறுவோர் வாழ்கின்றனர். அவர்களின் நட்பை நீக்கி வாழ்வதே நன்மை தரும் செயலாகும் என்றும், குளத்தின் அடிப்பகுதியில் படிந்திருக்கும் வண்டல் போல் நம் மனதில் படிந்த அழுக்கை அகற்றாமல் பிறர் (குணத்தை) அழுக்கைக் காண்பது அறச்செயலாகாது என்றும், மரத்தில் உள்ள குரங்கு எங்கும் பாய்வது போல் அசையும் மனத்தை அசையாமல் பாதுகாத்துக் கொள்வது தெய்வீகமாகும் என்றும் மனிதர்களின் இயல்புகளை எடுத்துரைக்கின்றார். ஆதனால் மக்களாய்ப் பிறந்த அனைவரும் நல்வர்களாகவே வாழ்ந்தால் வீட்டிற்கும் நாட்டிற்கும் நன்மையாகும் என்பது உறுதி.

## யாக்கை நிலையாமை

உயிர் பிரிந்தபின் உயிரற்ற உடல் ஒரு பிடி சாம்பலாகும் என்பதை அறியாமல் பெருமை பேசித்திரிகின்றார். நிலையாமை என்னும் கருத்து மனதில் நிலைத்துவிட்டால் இன்பம் தானே வந்தெய்தும்.

***வடிவுகண்டு கொண்டபெண்ணை மற்றொருவன்நந்தினால்***
***விடுவனோ அவனைமுன்னர் வெட்டவேணும் என்பனே***
***நடுவன்வந்து அழைத்தபோது நாறும்இந்த நல்லுடல்***
***சுடலைமட்டும் கொண்டுபோய்த் தோட்டிகைக்***
***கொடுப்பரே பா: 6***

என்னும் பாடல் யாக்கை நிலையாமையை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. தன்னுடைய அழகிய பெண்ணை மற்றவன் விரும்பினால் அவனை வெட்டுவதற்கு கிளம்புகிறோம். ஆனால் எமன் வந்து உயிரை எடுத்துப் போகும்போது அவனைத் தடுப்பதில்லையே ஏன்? அதுதான் இயற்கையின் நியதி. உயிர் நீங்கிய உடலை யாரும் வீட்டில் வைத்துப் பாதுகாப்பதில்லை. பிணம் நாறிவிடும் என்றுதானே சுடுகாட்டில் சென்று பிணம் சுடுவோரிடம் உடலைக் கொடுக்கிறோம். இதிலிருந்து தெரியவில்லையா யாக்கையின் நிலையாமை. நிலையற்ற செல்வம், பிள்ளைகள், மனைவி, சுற்றம் என்று இவற்றை நம்பிவாழும் மக்களே! உயிரை நாடி வரும் எமன் நம் உயிரைப் பறித்துச் சென்றபின், இறந்த ஆடு பெறும் விலைகூட இந்த உடலுக்கு கிடைக்காது (பா:117) என்பதை ஏன் உணர மறுக்கிறோம். நிலையில்லா உடலைப் பேணுவதை விடுத்து நிலையான இறைவனை மனதில் கொண்டு அறம்செய்து வாழவேண்டும் என்பதே இப்பாடல் உணர்த்த வந்த நெறியாகும்.



## செல்வம் நிலையாமை

செல்வம் இன்றொருவர் கையில் நாளை மற்றொருவர்கையில் என மாறி மாறி இடம்பெறும் நாடோடி வாழ்க்கை போன்றது. அதனால் பெருஞ்செல்வம் தேடுவதில் ஆசை கொள்ளாமல் இருப்பதே அறமாகும். பெரிய அளவில் வீடுகட்டி நீண்டநாள் வாழ்வோம் என்றெண்ணி அழியும் செல்வத்தைத் தேடிவைக்கிறோம். ஆனால் எமன் வந்து உயிரை எடுத்து சென்றபின் அந்த பெரிய வீட்டில் உயிரற்ற இவ்வுடலை யார் வைத்துப் பாதுகாப்பார் (பா:25). இவர்தானே இந்த வீட்டைக் கட்டினார் என்று அவர் உடலை வீட்டிலா வைத்துப் பாதுகாக்கிறோம். இல்லையே!

***மிக்கசெல்வம் நீர்படைத்த விறகுமேவிப் பாவிகாள்***
***விறகுடன் கொளுத்திமேனி வெந்துபோவது அறிகிலீர்***
***மக்கள் பெண்டிர்சுற்ற மென்று மாயை இவையெலாம்***
***மறலிவந்து அழைத்தபோது வந்துகூட லாகுமோபா: 81***

இப்பாடல் செல்வம் நிலையாமையை எடுத்துக்கூறியதோடு நிலையற்ற செல்வத்தைத் தேடுவதில் காலத்தை வீணாகக் கழிக்க வேண்டாம் என்ற அரிய கருத்தையும் குறிப்பிடுகிறது.

## உயிர் நிலையாமை

***கறந்தபால் முலைப்புகா கடைந்தவெண்ணெய்மோர்புகா***
***உடைந்துபோன சங்கினோசை உயிர்களும் உடற்புகா***
***விரிந்தபூ உதிர்ந்தகாயும் மீண்டும்போய் மரம்புகா***
***இறந்தவர் பிறப்பதுஇல்லை இல்லையில்லைஇல்லையே***
***பா: 48***

இப்பாடல் இயற்கையின் நியதிகளை எடுத்துக்கூறி அவை எப்படி பழைய நிலையை அடையமுடியாதோ அதுபோலவே இவ்வுடம்பிலிருந்து உயிர்போனால் மீண்டுவந்து உடம்பில் கண்டிப்பாக, உறுதியாக புகாது என்று சித்தர் உயிர்நிலையாமையை எடுத்துரைக்கின்றார். மேலும் எமத் தூதர்கள் விரைந்து ஓடிவந்து உயிரோடு மோதி உடலைக் கீழே சாய்த்து உயிரைமட்டும் எடுத்துச் செல்வதை உலகின் உண்மை எனக் கண்டுணர்ந்து, வாழும்வரை

பிறர்க்கு உதவிசெய்து நாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்வித்து வாழ்வதே சிறந்ததாகும்.

### அனைவரும் சமம்

சாதி இரண்டொழிய வேறில்லை என்னும் ஔவையின் கருத்தை அடிமனதில் கொள்ளவேண்டும். அதனை விடுத்து நான் உயர்ந்த சாதி, நீ தாழ்ந்த சாதி என்னும் எண்ணம் எவர் மனதினும் இருக்கக்கூடாது. சாதியில் தாழ்ந்த பெண்ணும், செல்வத்தில் உயர்ந்த பணக்காரியும் வேறுவேறு அல்லர். தசை எலும்பு முதலிய எழுவகைத் தாதுக்களில் இந்த உயர்வு தாழ்வுகள் எழுதப்பட்டு இருப்பதில்லை. அதுபோல இருவகையினரிடம் அனுபவிக்கும் இன்பமும் ஒரே வகை இன்பமே ஆகும். வேறுபாடு நீக்கி இருவரையும் பகுத்துப்பார்த்தால் நம் உள்ளத்தில் யாவரும் ஒருவர் என்பது தெரியும். இறைவன் படைப்பில் யாவரும் சமம் என்ற சமூகநீதியை சித்தர்பாடல்கள் குறிப்பிடுகின்றன.

### ஆசை

ஆசையே ஒருவனது அழிவிற்குக் காரணமாக அமையும் ஒரு குணமாகும். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை போன்றவை மனிதனை இழி நிலைக்குத் தள்ளுவதோடு மட்டுமல்லாமல் அழிவையும் தேடிக் கொடுத்துவிடும் என்பதை உணர்ந்து 'ஆசைகளை அறவே அகற்றி வாழ வேண்டும். இறைவன் கொடுப்பதை மனிதனால் தடுக்க முடியாது. இறைவன் தடுக்க நினைப்பதை எவராலும் கொடுக்க முடியாது' என்பதை அறிந்து ஆசையற்று வாழவேண்டும்.

***வேணும்வேணும் என்றுநீர் வீண்உழன்று தேடுவீர்***
***வேணுமென்று தேடினாலும் உள்ளதல்லது இல்லையே***
***வேணும்என்று தேடுகின்ற வேட்கையைத் துறந்துபின்***
***வேணும்என்ற அப்பொருள் விரைந்துகாண லாகுமே***
***பா: 140***

என்னும் சித்தர்பாடல் வேண்டும் என்று தேடும் விருப்பத்தைத் துறந்துவிட்டால் அப்பொருள் விரைந்து நம் காலடிக்கே வந்துசேரும் என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது.

பேதம் பேசுபவர்கள், ஆசாரம் பேசுகிறவர்கள்,பாவபுண்ணியம் பேசுபவர்கள் மறைவாகக் காமத்தில் ஈடுபடுவதை இப்பாடல்வழி இகழ்ந்தும் கடிந்தும் உரைக்கின்றார் சித்தர்.

**ஓடியோடி பாவியழைத்து உள்ளங்கால் வெளுத்ததும்**
**பாவியான பூனைவந்து பாலிலே குதித்ததும்**
**பணிக்கன் வந்து பார்த்ததும் பாரமில்லை என்றதும்**
**இழையறுந்து போனதும் என்னமாயம் ஈசனே பா: 172**

### உதவி

உதவி செய்வோரே உயர்ந்தோர் என்று சான்றோர் கூறுவர். வலக்கை செய்யும் உதவி இடக்கை அறியாமல் செய்வதே



உன்னதமான உதவியாகும். பிறர்க்கு உதவி செய்து வாழ்வதையே வாழ்வின் லட்சியமாகக் கொண்டு வாழ்வதே சிறந்த வாழ்வாகும்.

***அன்னமிட்ட பேரெலாம் அனேகக்கோடி வாழவே***
***சொன்னமிட்ட பேரெலாந் துரைத்தனங்கள் பண்ணலாம்***
***வின்னமிட்ட பேரெலாம் வீழ்வர்வெந் நரகிலே***
***கன்னமிட்ட பேரெலாம் கடந்துநின்ற திண்ணமேபா: 192***

இப்பாடல் பிறருக்கு உணவு வழங்கி புண்ணியம் அடைந்தோர் பலகோடி காலம் வாழ்வார்கள் என்றும், பொன்னைத் தானமாகக் கொடுத்தவர்கள் உலகை ஆள்வார்கள் என்றும் உதவி செய்பவர்களை வகைப்படுத்தி உயர்வாக கூறுகிறது.

### நிறைவாக

எல்லா உயிர்க்கும் முதன்னையாக இருப்பவன் இறைவன் ஒருவனே. அவன் பிரபஞ்சம் முழுதும் வியாபித்திருப்பவன். வெளியே தெரியாமல் இருக்கும் ஊமைக்காயம் போல் உள்ளத்தில் உறைபவன். மகரந்தச் சேர்க்கை இல்லாமல் மறுவாழை தோன்றுவது போலக் கடவுளில் மனிதனும் மனிதனில் கடவுளும் தோன்றுவர் என இதுபோன்ற இறைவனைப் பற்றிய பல அரியசெய்திகளை அதிகமாகக் குறிப்பிட்டிருந்தாலும் மக்களின் நல்வாழ்விற்கும் பல அறக்கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார் சித்தர் சிவவாக்கியர்.

சுருங்கக்கூறின் சமயப் பூசல்களும், சாதி வேறுபாடுகளும், போலிச்சடங்குகளும் நிறைந்திருந்த காலகட்டத்தில் தோன்றிய சிவவாக்கியர் சமுதாய உணர்வினால் ஈர்க்கப்பட்டு தனது கண்ணெதிரே கண்ட இழிவுகளையும் சீர்கேடுகளையும் போக்கிச் சமுதாயத்தை மாற்றியமைக்கும் பணியில் 'சித்தர் நெறியை'ப் பின்பற்றி இலக்கியம் வாயிலாக உழைத்தார். அவரது பாடற் கருத்துகள் அக்காலச் சமய சமூகப் பண்பாட்டு வரலாற்றை பிரதிபலிப்பதுடன் மாற்றத்தை நோக்கிச் செயல்பட்ட அவர்தம் சிந்தனைப் போக்கையும் தெளிவாகச் சுட்டுகின்றன. சமயம் உள்ளிட்ட சமுதாய அமைப்புகள் யாவும் அகக்காட்சி அனுபவம் வாய்க்கத் தக்க மனிதர்களை நெறிப்படுத்துவனவாகவும் மனித நேயத்தை வளர்ப்பவனாகவும் சமன்மைப் பண்பை வலியுறுத்துவனாகவும் விளங்கவேண்டும் என்பது சிவவாக்கியர் கண்டதத்துவமாகும்.